## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
## மற்றும்
## இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை–சென்னை
## (13.06.2015 முதல்17.06.2015 வரை)

**கடந்த முன்று நாட்களில் நிலவிய வானிலை** (09.06.2015 முதல் 11.06.2015 வரை)

சென்னை மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் கடந்த முன்று நாட்களாக வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்பட்டது 1.9 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 36.0–39.0°C மற்றும் 25.0–28.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 62 முதல் 70 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 7–8 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 13.06.2015 | 14.06.2015 | 15.06.2015 | 16.06.2015 | 17.06.2015 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மி) | 10 | 6 | 2 | 2 | 4 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 8 | 8 | 8 | 8 | 8 |
| காற்று வரும் திசை | தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |
| வெப்பநிலை °C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை °C | 38 | 38 | 38 | 37 | 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை °C | 27 | 27 | 27 | 28 | 28 |
| ஈரப்பதம் | 70–80 | 70–80 | 70–80 | 66–70 | 66–70 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. அடுத்த ஐந்து நாட்களில் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. அதிக ஈரப்பதமும் வெப்பமும் ஒட்டுண்ணிகள் மற்றும் ஈக்களின் பெருக்கத்தை அதிகபடுத்தும். எனவே, உழவர்கள் முறையாக கொட்டகையை சுத்தம் செய்து கால்நடைகளின் சாணத்தை மூடி எருகுழியில் சேகரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளால் பரவும் நோய் கட்டுபடுத்தப்படுகிறது.
3. உழவர்கள் கறவை மாடுகளில் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
4. கோழிப் பண்ணைகளில் தண்ணிர் தோட்டி மற்றும் தண்ணீர் குழாய்களை கோனிப்பை கொண்டு முடுவதன் மூலம் கோழிகளுக்கு குளிர்ந்த குடிநீர் அளித்து வெப்பத் தாக்கத்தின் அளவை குறைக்கலாம்.
5. கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை உயர்த்தி வைப்பதல் வெப்பதாக்கத்தை குறைக்கலாம் . மேலும் குடிநீர் தாது உப்புகள் மற்றும் B-காம்ளக்ஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அகழ்ச்சியிலிருந்து பாதுகாக்கலாம்.
6. கால்நடைகளை வெப்பம் அதிகமாயிருக்கும் மதிய வேளையில் மேய்ச்சலுக்கு அனுப்பாமல் குளிர்ந்த குடிநீர் மற்றும் நிழல் அளிப்பதான் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**
**(வேளாண் அறிவியல் நிலையம், காட்டுப்பாக்கம்)**

**முக்கிய பயிர்கள்: நெல், கரும்பு மாற்றும் எள்**
**பருவம் :நெல் அறுவடை பருவத்தில் உள்ளது.**

1. தோட்ட பயிர்களின் வேர் பகுதிகளில் தேங்காய் நார் கொண்டு மூடுவதன் மூலம் மண்ணின் ஈரத்தன்மையை பாதுகாக்கலாம்.
2. கரும்பு பயிருக்கு பொட்டாஷ் மற்றும் யுரியா 2.5 சதவீத அளவில் இலைவழியாக 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிப்பதன் முலம் தண்ணிர் தட்டுப்பட்டினால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கலாம்.
3. எள் பயிரில் காய் துளைப்பான், இலை மற்றும் தண்டு பிணைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 மிலி குயினால்பாஸ் 25 ECஅல்லது வேப்ப எண்ணெய் 2 சதம் தெளிக்கவும்
4. நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுளோடோப்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டேர்ருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த வேளாண் வானிலை தகவல் மையம்*
*மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறை,*
*சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை – 600 007.*